**வேளாண்மைத்துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் பகுதி 02 - 2019**

---

வேளாண்மைத்துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் - பகுதி 02 இன் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 சனவரி 17 ஆம் திகதிய 5873 – எல்கே ஆம் இலக்க நிதியளித்தல் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியதாகக் கருதப்படும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம், விவசாய அமைச்சு வேளாண்மைத்துறை நவீனமயமாக்கல் செயற்திட்டத்தின் பகுதி 02 இன் நிறைவேற்றல் முகவராகவும் அமுலாக்கல் முகவராகவும் உள்ளது. யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, அனுராதபுரம், மட்டக்களப்பு, மொனராகலை, மாத்தளை மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் உள்ள சிறுநிலவுடைமை விவசாயிகள் மற்றும் விவசாய வணிகங்களின் விவசாய உற்பத்தித்திறனை அதிகரித்தல், சந்தை நுழைவை மேம்படுத்துதல் மற்றும் பெறுமதிச் சேர்க்கையை முன்னேற்றுதல் என்பவற்றிற்கு ஆதரவளிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். மேலும், சிறுநிலவுடைமை விவசாயிகளுக்கு போட்டிமிக்க சந்தைவாய்ப்புள்ள பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் சந்தைத் தேவைப்பாட்டிற்கு ஏற்றவகையில் அவர்களது இயலளவைக் கட்டியெழுப்பி வர்த்தகமயமாக்கலின் பால் நகர்த்துவதற்கு வேளாண்மைத்துறை நவீனமயமாக்கல் செயற்திட்டத்தின் பகுதி 02 இனால் எதிர்பார்க்கப்படுகின்றது. நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 9,175.88 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 64.87 மில்லியன் தொகை சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 சனவரி 01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 ஆம் திகதி பூர்த்திசெய்யப்பட வேண்டுமென திட்டமிடப்பட்டுள்ளது.

**1.3 அபிப்பிராயம்**

இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களானவை 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும்

பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டம் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை/ கணக்காய்வுச் சிக்கல்கள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | 2002 நவம்பர் 28 இன் ஐஏஐ/2002/02 ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கை | ரூபா 11.9 மில்லியன் கிரயமான கணனிகள் மற்றும் பொருத்திகள், கணனி மற்றும் பொருத்திகள் பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, மடிக் கணனிகளும் பொருத்திகளும் குறித்த செயற்திட்ட நோக்கிற்காகப் பயன்படுத்தப்பட்டிராததுடன் செயற்திட்ட அலுவலகத்தில் வழங்கப்பட்ட பொருட்கள் குறித்த பதிவேடுகள் கிடைக்கப்பெற்றிராமையால் ஏனைய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுப்பட்டிருந்தன. | சொத்துக்கள் தவறாகவும் ஏனைய நோக்கங்களுக்காகவும், பயன்படுத்தப்படுவதுடன் சேதப்படுத்தப்படலாம் | கணனிகள் மற்றும் பொருத்திகளின் பிரதான கணிப்பீட்டுப் பதிவிற்கு மேலதிகமாக ஓர் விபரமான பதிவேடு கணனிகள் மற்றும் பொருத்திகளின் வழங்கலின் போது தற்போது பேணப்படுவதுடன் சகல சொத்துக்களும் கணக்கீட்டு மென்பொருளான ''பிசி'' இல் பதிவுசெய்யப்படுகின்றது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | முகாமைத்துவக் கணக்காய்வு திணைக்களத்தின் 2016 யூன் 10 இன் 02/2016 ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வு | உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கை செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், செயற்திட்டத்தின் கொடுக்கல்வாங்கல்கள் விவசாய அமைச்சின் உள்ளகக் | உள்ளகக் கட்டுப்பாடு முறையாக அமுலாக்கப்பட முடியாது. | உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை ஆட்சேர்ப்பதற்கான முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் 2020 யூலை 19 ஆம் திகதி | உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் அல்லது செயற்திட்ட |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சுற்றறிக்கை | கணக்காய்வுப் பிரிவின் கணக்காய்விற்கும் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | கிடைக்கப்பெற்றுள்ளதுடன் இப் பதவி விரைவாக நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | கொடுக்கல்வாங்கல்கள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் கணக்காய்வு செய்யப்பட வேண்டும். |
| (இ) | முதலீட்டுச் செயற்திட்ட நிதிக் கடனாளிகளிற்கான உலக வங்கிக் கொள்வனவு பிரமாணங்களின் 7.39 (ஆ) ஆம் இலக்க பந்தி | உலக வங்கிக் கொள்வனவு பிரமாணங்களிற்கு முரணாக ஓர் கொள்வனவு உசாவுனர் வாடகைக் கொடுப்பனவு அடிப்படையில் ஆறுமாதங்களுக்காக ரூபா 250,000 மாதாந்தக் கொடுப்பனவு அடிப்படையில் 2018 ஆகஸ்ட் முதல் நியமிக்கப்பட்டு ரூபா 1.5 மில்லியன் 2019 ஆம் ஆண்டின் இறுதியில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | உசாவுனருக்கு அளப்பரிய நன்மை கிடைக்கப்பெற்றுள்ளது. | குறுகிய காலத்திற்காக கொள்வனவு உசாவுனர் வாடகைக் கொடுப்பனவு அடிப்படையில் பெறப்பட்டிருந்த போதிலும் அவரது அனுபவத்தையும் சர்வதேச கொள்வனவு முறைமை மற்றும் நடைமுறைகளில் அவருக்குள்ள விதிவிலக்கான அறிவின் காரணமாக அவரது சேவை தொடர்ந்தும் உலக வங்கியின் உடன்பாட்டுடன் பெறப்பட்டிருந்தது. | உலக வங்கியின் கொள்வனவு பிரமாணங்களுடன் இணங்கப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்டச் செயற்பாடுகளின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்

செயற்திட்டச் செயற்பாடுகள் 5 கூறுகளின் கீழ் அமுலாக்கப்படுகின்றது. குறிப்பாக
(அ) விவசாயிகளுக்கான பயிற்சியளித்தலும் இயலளவைக் கட்டியெழுப்புதலும்
(ஆ) நவீன விவசாயத் தொழில்நுட்பப் பூங்காக்கள்
(இ) உற்பத்தியும் சந்தை உட்கட்டமைப்பும்
(ஈ) பகுப்பாய்வும் கொள்கை ஆலோசனை உதவியும்
(உ) செயற்திட்ட முகாமைத்துவம், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு

| | கூறு | செயற்பாடுகள் | கணக்காய்வுப் பிரச்சனைகள் | தாக்கங்கள் | முகாமைத்துவத்தின் கருத்து | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (அ) | நவீன விவசாய தொழில்நுட்பப் பூங்கா | சர்வதேச சேவை வழங்குனரின் ஆட்சேர்ப்பு | சர்வதேச சேவை வழங்குனரின் ஆட்சேர்ப்பு 3 ஆணடுகளாகத் தாமதமடைந்திருந்தது. | செயற்திட்டக் காலப்பகுதி நீடிக்கப்பட வேண்டியதுடன் இது செயற்திட்டத்தின் திட்டமிடப்பட்ட ஒட்டுமொத்தக் காலப்பகுதியையும் தாக்கும். | உலக வங்கிக்கும் திறைசேரிச் செயலாளருக்கும் இடையே 2017 சனவரி 17 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட கடன் உடன்படிக்கைத் திகதியில் இருந்து செயற்திட்டம் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தின் முக்கிய ஊழியர்கள் நியமிக்கப்பட்டதன் பின்னர் 2017 இன் பிற்பகுதியில் இருந்தே செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. மேலும், இக் கொள்வனவிற்கான உலக வங்கியின் அங்கீகாரம் 2017 திசெம்பர் 01 ஆம் திகதியே கிடைக்கப்பெற்றது. | சர்வதேச சேவை வழங்குனர் முறையான ஒருங்கிணைப்பைப் பேணவேண்டியதுடன் தாமதமான நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பகுப்பாய்வு மற்றும் கொள்கை ஆலோசனை ஆதரவு | கொள்கை விருத்தி | இக் கூறிற்கு யூஎஸ்டொலர் 4.28 மில்லியனிற்குச் சமனான ரூபா 624.67 மில்லியன் ஒதுக்கீடாக மேற்கொள்ளப்பட்டிருந் தது. எவ்வாறெனினும், யூஎஸ்டொலர் 0.3 | எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நலன்பெறுனர்களால் பெறப்பட்டிருக்கவில்லை. | போதியளவு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை . விவசாய அமைச்சிற்கான "தேசிய விவசாய தகவல் முறைமை" கொள்கை வகுப்பிற்கு தொழில்நுட்ப ஆதரவாக நடுத்தர கால நோக்கத்துடன்இயலளவைக் | செயற்திட்டச் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கும் செயற்திட்டத்தால் அமுலாக்கப்படும் நடவடிக்கைகளில் நெருங்கிய மேற்பார்வையைச் செய்வதற்கும் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | மில்லியனிற்குச் சமனான ரூபா 44.72 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது. | | கட்டியெழுப்புதல், பொதுச் சேவை வழங்கலை மேம்படுத்தல் மற்றும் விவசாய இடர் கண்காணிப்பை மேம்படுத்தலுக்கு உதவுமுகமாக தரவு சேகரிப்பு மற்றும் நிர்வாகத்திற்கான கொள்கை வகுத்தல். | தொடர்புடைய தரப்பினரைச் செல்வாக்குச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | உற்பத்தி மற்றும் சந்தை உட்கட்டமைப்பு | உற்பத்தி மற்றும் சந்தை உட்கட்டமைப்புகளை மேம்படுத்தி மறுசீரமைத்தல் | ஓர் சர்வதேச சேவை வழங்குனரை நியமிப்பதில் தாமதம் ஏற்பட்டமையால் செயற்திட்டத்தால் நவீன விவசாய தொழில்நுட்பப் பூங்காக்களை அமைத்தல் போன்ற ஏனைய முக்கியமான வேலைகளை நிறைவேற்றாது யூஎஸ் டொலர் 4.93 மில்லியன் செலவை ஏற்று கிராமிய வீதிகள், கிராமியக் குளங்கள், விவசாயக் கிணறுகளைப் மறுசீரமைப்பதற்காகவும் களஞ்சியப்படுத்தல் வசதிகளுக்காகவும் முன்னோடிச் செயற்திட்டப் பகுதிகளுக்காக | எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள் எய்தப்பட்டிருக்கவில்லை | போதியளவு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டக் குறிக்கோள்களை அடைவதற்கு செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட குறிக்கோள்ளைப் பின்பற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

செயற்திட்டத்தால் செலவிடப்பட்டிருந்தது.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வுச் சிக்கல்கள் | தாக்கங்கள் | முகாமைத்துவத்தின் கருத்து | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | ரூபா 69.55 மில்லியன் கிரய மதிப்பீட்டில் எட்டு உசாவுகை நிறுவகங்களுக்கு எட்டு கொள்கை அபிவிருத்தி ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன. ரூபா 36.4 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் போது உசாவுகை நிறுவகங்களுக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் அவை தொடர்பான இறுதி அறிக்கைகள் குறித்த எதிர்பார்க்கப்பட்ட திகதிகளில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நலன்பெறுனர்களால் உத்தேசிக்கப்பட்ட நலன்கள் பெறமுடியாது போகும். | போதியளவு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்த உடன்படிக்கைகளின் தேவைப்பாடுகளுக்கு இணங்கி நடக்குமாறு ஆலோசனை நிறுவகங்களைச் செயற்படுத்துவதற்கு பணிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஓர் பயனாளி தகவல் முறைமையை வடிவமைத்து, விருத்தி செய்து, ஸ்தாபித்து பேணுவதற்காக ரூபா 8.25 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயத்தில் ஒப்பந்தம் 2018 ஒக்டோபர் 28 ஆம் திகதி வழங்கப்பட்டு 2019 பெப்ரவரி 27 ஆம் திகதி அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1.65 மில்லியன் | நலன்பெறுனர்களால் உத்தேசிக்கப்பட்ட நலன்கள் பெறமுடியாது போகும். | செயற்திட்டத்தின் சகல கொள்வனவுகளும் கணிசமான காலக்கேடு தேவையான உலக வங்கி கொள்வனவு வழிகாட்டலின் கீழ் பல நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் அமுலாக்கப்பட வேண்டும். மேலும், 2019 இல் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலும் உலகளாவிய ரீதியில் பரவிய | ஒப்பந்த உடன்படிக்கைகளின் தேவைப்பாடுகளுக்கு இணங்கி நடக்குமாறு ஒப்பந்ததாரரைப் பணிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | செலுத்தப்பட்டிருந்த போதிலும், குறித்த வேலைகள் 16 மாதங்களின் பின்னர் 2020 யூன் 30 ஆம் திகதியான கணக்காய்வுத் திகதி வரையிலும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. | | கோவிட் 19 தாமதத்திற்கான சில காரணிகளாகக் காணப்பட்டன. | |
| (இ) | மீளாய்வாண்டின் போது ரூபா 107.46 மில்லியன் தொகையான மதிப்பீட்டுக் கிரயத்தில் விவசாய வியாபார் பயிற்சிக் கல்லூரிக்கான ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 11.85 மில்லியன் சேவை வழங்குனருக்கு செலுத்தப்பட்டிருந்தது. கிடைக்கப்பெற்ற தகவலின் படி, விவசாயிகளின் தெரிவு முறைமையில் உள்ள குறைபாட்டினாலும் சேவை வழங்குனரின் நலிவான திட்டமிடலின் காரணமாகவும் பயிற்சித் திட்டங்கள் எதிர்பார்க்கப்பட்ட அளவில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | விவசாயிகளால் உத்தேசிக்கப்பட்ட நலன்கள் பெறமுடியாது போகும். | முதல் 20 முன்னோடிகளில் 1750 நலன்பெறு விவசாயிகளில் 1450 விவசாயிகள் மாத்திரமே விவசாய வியாபாரப் பயிற்சிகளை நிறைவேற்றியிருந்தனர். அதே விவசாயக் குழுக்களுக்கான விவசாய உற்பத்தி அமைப்புப் பயிற்சி தற்போதே நிறைவேற்றப்பட்டிருந்தது. இதன் படி, 30,000 பயிற்சி மனித நாட்கள் பூர்த்திசெய்யப்படக் கூடிய நிலையில் காணப்பட்டது. செயற்திட்டம், 80% இற்கும் மேலான வெற்றியை விவசாயப் பயிற்சி பூர்த்திசெய்திருந்தது. | ஒப்பந்த உடன்படிக்கைகளின் தேவைப்பாடுகளுக்கு இணங்கி நடக்குமாறு சேவை வழங்குனரைப் பணிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். விவசாயிகளின் தெரிவு முறைமையில் கிட்டிய கண்காணிப்பு தேவைப்படுகின்றது. |

**3.3 தளப் பரிசோதனைகளின் போது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள்**

| இல. | கணக்காய்வுச் சிக்கல்கள் | தாக்கங்கள் | முகாமைத்துவத்தின் கருத்து | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ---------------------------------- | ----------------- | --------------------------------------- | --------------------- |
| (அ) | அநுராதபுர மாவட்டத்தில் உள்ள விவசாய நிலங்களில் மேற்கொள்ளப்பட்ட தளப் | பயனற்ற செலவினம் | கணனிகள் மற்றும் பொருத்திகளின் பிரதான கணிப்பீட்டுப் பதிவிற்கு | மேலதிகக் கிரயத்தைத் தவிர்ப்பதற்கு உப |

| | | | | |
|---|---|---|---|---|
| | பரிசோதனையின் போது, திரை வேலி அமைத்தல், தழைக் கூளம் (மல்சிங்), சொட்டு நீர்ப்பாசன முறைகள் ஒரே ஒரு சாகுபடிப் பருவத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டு பின்னர் தொடர்ந்து பயன்படுத்தப்படாது அகற்றப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது. ஆகவே, மேற்கொள்ளப்பட்ட ரூபா 488 மில்லியன் தொகையான செலவினம் பயனற்றுக் காணப்பட்டது. | | மேலதிகமாக ஓர் விபரமான பதிவேடு கணனிகள் மற்றும் பொருத்திகளின் வழங்கலின் போது தற்போது பேணப்படுவதுடன் சகல சொத்துக்களும் கணக்கீட்டு மென்பொருளான ''பிசி'' இல் பதிவுசெய்யப்படுகின்றது. | அலுவலகங்களின் நடவடிக்கைகளில் செயற்திட்ட கண்காணிப்பு அலகின் முறையான கண்காணிப்பும் மேற்பார்வைப் பொறிமுறையும் கையாள்வதற்குத் தேவைப்படுகின்றது. |
| (ஆ) | செயற்திட்ட கண்காணிப்பு அலகின் களஞ்சியத்தில் 2020 யூன் மாதம் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையில் முறையான திட்டமிடல் இன்றி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தமையால் ரூபா 16 மில்லியன் பெறுமதியான 8,606 எண்ணிக்கையான பயிற்சிக் கைநூல்கள் ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக விவசாய வியாபார அமைப்புகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படாது பயன்படுத்தப்படாத நிலையில் காணப்பட்டன. | பயனற்ற செலவினம் | அச்சிடப்பட வேண்டிய பயிற்சிக் கைநூல்களினதும் செயன்முறைக் கையேடுகளினதும் எண்ணிக்கை எதிர்பார்க்கப்பட்ட விவசாயிகளினது எண்ணிக்கையையும், மாவட்டங்கள், அவர்களது மொழிகளையும் சார்ந்தே காணப்பட்டது. துண்ட அடிப்படையில் இவ் ஆவணங்களை அச்சிடுவது செலவை உள்ளடக்குவது மாத்திரமன்றி நேரமெடுக்கும் செயற்பாடாகவும் காணப்பட்டது. இந் நிலையைக் கருத்திற்கொண்டே எதிர்காலத் தேவைப்பாடுகளையும் கருத்திற்கொண்டு குறித்த பாரியளவு தொகுதி அச்சிடப்பட்டுள்ளது. விநியோகிக்கப்படாத நூல்கள் எதிர்வரும் காலத்தில் முற்றாகப் பயன்படுத்தக் கூடியவகையில் களஞ்சியத்தில் பாதுகாப்பான நிலையில் காணப்படுகின்றன. | அச்சீட்டு ஒப்பந்தம் வழங்கப்பட முன்னர் பயிற்சிக் கைநூல்களின் உண்மையான தேவைப்பாடுகள் முறையாக மதிப்பிடப்பட வேண்டும். |

3.4 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட மூலவளங்கள்

| இல. | கணக்காய்வுச் சிக்கல்கள் | தாக்கங்கள் | முகாமைத்துவத்தின் கருத்து | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ------------------------------------ | ---------------- | --------------------------------------- | ---------------------- |
| (அ) | கிடைக்கப்பெற்ற தகவலின் படி, செயற்திட்டத்தின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் ஓரளவு திருப்தியற்ற நிலையில் உள்ளது. மேலும், கடனில் மேற்கொள்ளப்பட்ட யூஎஸ் டொலர் 62.5 மில்லியனிற்குச் சமனான ரூபா 9,121 மில்லியன் ஏற்பாட்டில் யூஎஸ் டொலர் 15.54 மில்லியனிற்குச் சமனான ரூபா 2,264.32 மில்லியன் மாத்திரமான மொத்த ஏற்பாட்டில் 36.5 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொகையே செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 03 ஆண்டுகளின் பின்னர் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலவிடப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் நலிந்த செயற்பாட்டின் காரணமாக மானியத்தொகையாகக் கிடைக்கப்பெற இருந்த யூரோ 25 மில்லியன் கொடையளிக்கும் முகவரகத்தால் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிதியத்தின் முழுமையான ஒதுக்கீடு செயற்திட்டத்தின் முடிவுக் காலப்பகுதியின் போதும் பயன்படுத்தப்பட இயலாது. | நவீன விவசாயத் தொழில்நுட்பப் பூங்காக்களை நிறுவுவதற்கும், செயற்படுத்துவதற்கும், நிர்வகிப்பதற்கும், மாற்றுவதற்கும் ஓர் சர்வதேச சேவை வழங்குனரைத் தேர்ந்தெடுப்பதில் ஏற்பட்ட தாமதம் அடிப்படையில் செயற்திட்டத்தின் செயற்பாடுகளில் தாக்கத்தைச் செலுத்தியுள்ளது. சர்வதேச சேவை வழங்குனர் ஒருவர் தற்போது நியமிக்கப்பட்டுள்ளமையால் இந் நிலை விரைவில் சீராக்கப்படும். மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட ரூபா 1,640 மில்லியன் தொகையான பாதீட்டு ஏற்பாட்டில் மொத்தத் தொகையையும் பயன்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2019 திசெம்பர் 31 இன் முன்னர் உள்ளூர் வங்கிக் கணக்கொன்றை ஆரம்பிப்பதற்கு சர்வதேச சேவை வழங்குனர் தவறியமையால் ஒப்பந்தத் தொகையின் உள்ளூர் கூறிற்கு எதிரான 20% வேலை ஆரம்பிப்பு முற்பணம் செலுத்தப்பட முடியாது போனமையால் பயன்பாடு 96.77% இற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. (இணைப்பு 01) | செயற்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட இலக்குகளை எய்துவதற்கு ஏற்றவகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |